**நீகொழும்பு மாநகர சபை**
**கம்பஹா மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 ஏப்ரல் 08 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 யூலை 27 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஆகஸ்ட் 30 ஆந் திகதியும் நகாரதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நீர்கொழும்பு மாநகர சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | நூலக நிர்மாணத்தின் போது வேலைத்தள பொருட்களுக்காக ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்தப்பட்ட ரூபா 9,723,914 தொகை வேலைக்கடன் கொடுத்தோர் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டிய போதிலும் அந்தக் கணக்கில் ரூபா 4,012,000 மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டு மிகுதி ரூபா 5,711,914 தொகை குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் நூலக கட்டிட நிர்மாணம் (உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியம்) இன் கீழ் பதியப்பட்டு அதுவரையிலும் கடன் கொடுத்தோர் கணக்கில் காணப்பட்ட வரவு மீதி குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் தேவையான சீராக்கம் செய்து சரிசெய்யப்பட வேண்டும். | நூலக கட்டிட நிர்மாணத்திற்கான வேலைத்தள பொருட்களுக்காக கொடுப்பனவு செய்வதற்கு 2018 இன் பாதீட்டில் அல்லது கடன் கொடுத்தோரின் கீழ் நிதியேற்பாடு ஒதுக்கப்படாமையினால் இந்த வழுக்கள் ஏற்பட்டிருந்தது. உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து மிகுதி பட்டியல்களுக்காக பணம் கிடைக்கும் போது இதனை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | மஞ்ஞொக்காஹேன பொது மயான நிலத்தில் புதிய கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக கொடுப்பனவு செய்யும் போது ரூபா 660,877 தொகையான முற்பண | ஒப்பந்தத்திற்காக வேலை ஆரம்பித்தல் முற்பணத்தின் அடிப்படையில் | கணக்கு வைத்தமை சரியானது. முற்பணமாக ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்ட தொகை ரூபா 4,405,865 ஆக இருந்ததுடன் ரூபா 660,877 தொகை |

| | | | |
|---|---|---|---|
| | கொடுப்பனவுத் தொகை கழிக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பெறுமதிசேர் வரி செலுத்த முடியாது. | பெறுமதிசேர் வரியாக (VAT) இருந்தது. |
| (iii) | 2016 ஆம் ஆண்டின் போது இலங்கை தேசிய பொருளியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்திற்கு செலுத்தப்பட்ட ரூபா 892,500 தொகையான முற்பணம் 2017 மே 19 ஆந் திகதி அறவிடப்பட்டிருந்த போதிலும், அந்த தொகை முற்கொடுப்பனவு கணக்கில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கணக்குகளில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதிவேடு சரிசெய்யப்பட்டுள்ளது. |
| (iv) | 2013 ஆம் ஆண்டின் போது புதிய பஸ் நிலையத்தை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்தின் இறுதிக் கொடுப்பனவாக தனியார் ஒப்பந்த நிறுவனத்திற்கு 16,198,530 தொகை செலுத்த வேண்டிய போதிலும், கடன்கொடுத்தோராக 2018 ஆம் ஆண்டில் ரூபா 5,000,000 மாத்திரமே ஒதுக்கப்பட்டிருந்தது. இறுதிக்கொடுப்பனவு செலுத்தப்படாமை தொடர்பாக சபைக்கு எதிராக ஒப்பந்தக்காரரால் வழக்கு தொடரப்பட்டிருந்த போதிலும், கணக்கின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கடன்கொடுத்தோருக்காக போதியளவான நிதியேற்பாடு ஒதுக்க வேண்டியிருந்ததுடன், கணக்கீட்டு கொள்கைகளின் பிரகாரம் நிச்சயமற்ற பொறுப்புக்கள் கணக்குகளில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 இன் நிதிக்கூற்றுக்களின் குறிப்புக்களின் மூலம் சபைக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள வழக்கு தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (v) | சபை நிதியத்தின் மூலம் பூர்த்தி செய்வதற்கு உடன்படிக்கை செய்யப்பட்ட ரூபா 16,142,173 தொகையான 20 வேலைகளின் பெறுமதிகளுக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கை செய்யப்பட்ட செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் அதற்காக போதியளவான கடன்கொடுத்தோர் நிதியேற்பாடு ஒதுக்கப்பட வேண்டும். | பிரதேசவாசிகளின் பிரச்சினைகளின் அடிப்படையிலும் சில செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்படவில்லை. சபையில் காணப்படுகின்ற நிதி நிலைமையின் அடிப்படையில் நகர பிதாவின் ஆலோசனையின் படி சில செயற்திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கி நிறைவேற்றப்பட்டதுடன் சில செயற்திட்டங்கள் மாத்திரம் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |
| (vi) | ஹேமில்டன் எல படகு சேவை நடாத்துவதற்குரியதாக மீளாய்வாண்டில் வாடகை வருமானம் ரூபா 484,000 தொகை அதிகரித்து | நிதிக்கூற்றுக்களில் தேவையான சீராக்கங்களைச் செய்து சரிசெய்ய | இது 2017 ஆம் ஆண்டில் வாடகை வருமானமாக இருந்ததுடன் அது தாமத வழுக்களின் அந்த ஆண்டிற்கு |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கு வைக்கப்பட்டிருந்தது | வேண்டும். | கணக்கீடு செய்யப்படவில்லை. எதிர்காலத்தில் இவ்வாறான வழுக்கள் ஏற்படாமல் இருப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (vii) | அறவிடப்பட்ட நீதிமன்ற தண்டப்பண வருமானத்தில் ரூபா 1,347,500 தொகை கடன் அடிப்படையில் பெறப்பட்ட டிறக்டர் மற்றும் டிறெயிலர்களுக்கான கடன் தவணையாக ஈடுசெய்யப்பட்டிருந்த போதிலும், நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 800,000 தொகை செலவு வைக்கப்பட்டமையால் நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 547,500 தொகை குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஆண்டிற்குரிய வருமானம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் நாட்குறிப்பு இலக்கம் 02 இன் மூலம் சரிசெய்யப்பட்டுள்ளது. |
| (viii) | முத்திரைக் கட்டண வருமானத்தில் ரூபா 2,784,000 பெறுமதியொன்று கடன் அடிப்படையில் வழங்கப்பட்ட கம்பட்டர் வண்டியின் கடன் தவணைப்பணமாக ஈடுசெய்யப்பட்ட போதிலும், ரூபா 1,984,000 தொகையான முத்திரைக் கட்டண வருமானத்தில் செலவு வைக்கப்பட்டமையினால் முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 800,000 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஆண்டின் போது கிடைத்த முத்திரை வருமானம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் நாட்குறிப்பு மூலம் சரிசெய்யப்பட்டுள்ளது. |
| (ix) | உள்ளூராட்சி திணைக்களத்திலிருந்து (மேல் மாகாணம்) கடன் அடிப்படையில் வழங்கப்பட்ட ரூபா 7,186 பெறுமதியான டிறக்டர் மற்றும் 04 டிறயிலர்கள் ரூபா 29,384,000 பெறுமதியான 02 கம்பெக்டர் வண்டிகள் கணக்கீடு செய்யும் போது அறவிடக்கூடிய பயன்பாட்டு சேவை வரவு வைக்கப்பட்டு உள்ளூராட்சி திணைக்கள செலவு கணக்கு வைக்கப்பட வேண்டிய போதிலும், கடன் கணக்கு செலவு வைக்கப்பட்டு திரண்ட நிதியக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் தேவையான சீராக்கங்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2018 ஆம் ஆண்டில் மாகாணங்களை கொள்வனவு செய்வதற்காக பாதீட்டில் போதியளவான நிதியேற்பாடு ஒதுக்கப்படாமையினால் திரண்ட நிதியத்தில் வரவு வைக்கப்பட்டிருந்தது. |
| (x) | மீளாய்வாண்டின் போது மேற்கூறப்பட்ட வாகனங்களின் | கடன் தவணைப்பணம் | 2019 ஆம் ஆண்டில் இந்தத் தவறு திருத்தப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | தவணைப்பணமாக ரூபா 4,697,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், உள்ளூராட்சி திணைக்கள கடன் கணக்கில் ரூபா 2,784,000 தொகை மாத்திரம் சீராக்கப்பட்டமையின் காரணமாக உள்ளூராட்சி திணைக்கள கடன் கணக்கில் ரூபா 1,895,000 தொகை குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கடன் கணக்கில் சீராக்கப்பட வேண்டும். | |
| (xi) | கடன் அடிப்படையில் பெறப்பட்ட 4 டிறக்டர் மற்றும் டிறயிலர்கள், 02 கம்பக்டர் வண்டிக்காக செலுத்தப்பட்ட ரூபா 4,697,000 தொகையான தவணைப் பணம் மூலதனமாக்கப்படாமல் 04 டிறக்கடர் மற்றும் டிறயிலர்களின் மொத்தப் பெறுமதியா ரூபா 7,186,000 தொகை இருப்புக் கணக்கிலும் 02 கம்பெக்டர் பெறுமதி ரூபா 29,384,000 தொகை மோட்டார் வண்டியும் வாகனமும் கணக்கில் சீராக்கம் செய்யப்பட்டிருந்தது. | இதற்காக உள்ளூராட்சி ஆணையாளரினால் விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்கு வைக்கப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டில் களஞ்சியத்திலிருந்து விநியோகிக்கபடாமையினால் மூலதனமாக்கப்படவில்லை. |
| (xii) | மீளாய்வாண்டில் பதிவழிக்கப்பட்ட முன்னைய ஆண்டுகளுக்குரிய ரூபா 8,307,596 தொகையான நிலுவை ஆதனவரி ஆண்டின் வருமானத்தில் பதிவழிக்கப்பட்டிருந்தது. | முன்னைய ஆண்டுகளுக்குரிய நிலுவை பதிவழித்தல் திரண்ட நிதியத்தில் சீராக்கப்பட வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட 12 கணக்கு விடயங்களின் மீதியினதும் பட்டோலைகளின் பிரகாரமான மீதிக்கும் இடையே ரூபா 94,390,140 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | உரிய வேறுபாடுகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தொடர்ந்தும் பரீட்சித்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நானாவித வைப்புக் கணக்கின் மீதி ரூபா 23,168,509 | கணக்கு மற்றும் பட்டோலைகள் சமமாக இருக்க | தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| | தொகையும் பட்டோலையின் மீதி ரூபா 23,122,212 தொகையும் மற்றும் வைப்பு பதிவேட்டின் மீதி ரூபா 21,467,109 ஆகவும் இருந்தன. | வேண்டும். | |
| (iii) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஆதனவரிக் கணக்கிற்கும் ஆதனவரி கணனி முறைமைக்கும் இடையே ரூபா 20,717,463 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இனங்காணப்பட்ட பிரச்சினைகளை சரிசெய்யப்பட்டதுடன் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(இ) பெறவேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 அந் திகதிக்கு முன்னர் முற்கொடுப்பனவு மீதி ரூபா 31,195,884 ஆக இருந்ததுடன், அதில் களஞ்சிய கடன்பட்டோரிடமிருந்து அறவிட வேண்டிய 1 வருடம் முதல் 22 வருட காலம் வரையான வீச்சில் ரூபா 8,004,702 தொகை நானாவித கடன்பட்டோரிடமிருந்து அறவிட வேண்டிய 1 முதல் 37 வருடங்கள் வரையிலான காலவீச்சில் ரூபா 1,711,085 ஆக இருந்ததுடன் அந்த பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்ட முற்கொடுப்பனவுகள் உரிய பணி நிறைவுபெற்றவுடன் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் வழங்கப்பட்ட முற்கொடுப்பனவுகளை தீர்ப்பதற்கு முன் மீண்டும் முற்கொடுப்பனவுகள் வழங்கப்பட முடியாது. | நீண்டகாலமாக கொண்டுவரப்படுகின்ற இனங்காண முடியாத முற்கொடுப்பனவு விடயங்கள் அவற்றை தீர்த்து வைத்தலில் பிரச்சினை காணப்படுவதுடன் தொடர்ந்தும் இதுதொடர்பாக ஆராய்ந்து இனங்கண்டு முற்கொடுப்பனவுகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஈ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 538,198,068 பெறுமதியான 03 கணக்கு விடயங்களுக்குரிய பட்டோலைகள், காலப்பகுப்பாய்வு மெய்மையாய்வு சபை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படாமையினால் கணக்காய்வின் போது அவற்றை திருத்திகரமானமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட மீதி உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |

## 1.4 இணங்காமைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (255 ஆவது அத்தியாயம்) 254(அ) | - | 2014 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலத்தில் கொச்சிக்கடை உப அலுவலகத்தில் ரூபா 1,900,869 தொகையான நிலுவை வியாபார அனுமதிபத்திர மீதியை அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிலுவை அனுமதிப்பத்திர கட்டணத்தை அறவிடுவதற்காக முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவை அனுமதிப்பத்திர கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | 1952 இன் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் அங்கீகரிக்கப்பட்ட உபவிதிகள் சட்டத்தின் XXIV மற்றும் XXV ஆம் பிரிவு | - | வெளியில் இறைச்சியை கொண்டு செல்வதற்காக நகர ஆணையாளரினால் அனுமதிப்பத்திரத் விநியோகித்தல், அதற்காக ஈடுபடுத்தப்படுகின்ற பதவியணியினர் சபையில் பதிவு செய்தல் மற்றும் அந்த இறைச்சி வகைகள் உணவுக்கு பொருத்தமானது என பரீட்சித்தலுக்கான கட்டணத்தை விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | உள்ளூராட்சி சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 மார்ச் 21 ஆந் திகதி முதல் இறைச்சி பரிசோதனைக்காக அறவிடுவதற்கு முன் நீர்கொழும்பு நகர அதிகாரப் பிரதேசத்தில் சகல மாட்டிறைச்சி கடைகளின் உரிமையாளர்களிடமிருந்தும் வருடாந்தம் அறுவைக்கூட கட்டணம் அறவிடப்பட்டிருந்தது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக குடியரசின் நிதிப் பிரமாணம் 189 | 1,104,572 | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,104,572 பெறுமதியான 01 வருடம் முதல் 26 வருடங்கள் வரையான கால வீச்சில் மதிப்பிழந்த 59 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மதிப்பிழந்த காசோலைகள் நீண்டகாலம் முதல் கொண்டுவரப்படுவதுடன் அது தொடர்பாக ஆராய்ந்து பார்க்கப்பட்ட போதிலும், தகவல்கள் கண்டறிய முடியாதிருந்தது. கண்டறியப்பட்ட தகவல்களின் பிரகாரம் ஒரு பகுதி மாத்திரம் தீர்வு செய்யப்பட்டிருந்தது. |
| (ஈ) | உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை | | | | |
| (i) | 2016 நவம்பர் 09 ஆந் திகதிய LGD/13/2016 ஆம் சுற்றறிக்கையின் 3, 13 மற்றும் 15 ஆம் இலக்க பந்திகள் | - | நீர்கொழும்பு மாநகர சபைக்குரிய 116 கடைகளில் 2003 ஆம் ஆண்டு முதல் தற்காலிக அடிப்படையில் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், இந்த இடங்கள் இதுவரையிலும்நிலையான அடிப்படையில் நடாத்திச் செல்லப்படுகின்றது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த நிலையத்தில் காணப்படுகின்ற கடைகள் சபையினால் நிர்மாணிக்கப்பட்ட அல்லது காணப்பட்ட கடைகள் அல்லாதிருந்ததுடன் தற்போது 16 வருடங்கள் அளவிலான காலத்திற்கு முன் வீதிகளில் நடைபாதை வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த தரப்பினர்கள் ஒரு இடத்தில் உரித்து கோரியிருந்தனர். |
| | | - | வாடகை உடன்படிக்கையின் கீழ் வருகின்ற சந்தர்பங்களின் போது கையளித்தல் மேற்கொள்ளப்படுமாயின் கையளித்தல் கட்டணம் மாதாந்த வாடகையைப் போல் 60 மடங்குக்கு | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்தக் கடை கொட்டைகளில் இருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய நிலுவை மீதியில் மேலும் அறவிடவேண்டிய தொகை --- மாத்திரமாக |

| | | | | |
|---|---|---|---|---|
| | | குறையாத பெறுமதியாக இருக்க வேண்டிய போதிலும், இந்த 116 கடைகளில் பாரியளவான தொகையொன்று இதுவரையிலும் கைக்குகை மாற்றப்பட்டிருந்ததுடன் கையளித்தல் கட்டணம் பாரிய அளவில் சபையினால் இழக்கப்பட்டிருந்தது. | | இருந்தது. |
| (ii) | 1988 ஏப்ரல் 20 ஆந் திகதிய 88/20 ஆம் இலக்க சுற்றறிக்கை | நிலுவை வருமானம் எவ்வளவு காலப்பகுதியில் உள்ளதாக காண்பிக்கப்பட்ட கூற்றொன்று தயாரிக்கப்பட்டு அதன் கீழ் 3 மாதங்களுக்கு ஒரு தடவை சபைக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிலுவை வருமானம் காணப்படுகின்ற கூற்று தயாரித்து சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | நிலுவை வருமான அறிக்கை மாதாந்தம் சபைக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

## 1.5 போதியளவான அதிகாரத்தால் உறுதிப்படுத்தாத கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கலாகேன உப அலுவலகத்திற்குரிய ரூபா 186,015 வியாபார அனுமதிப்பத்திரம் மற்றும் வியாபார வரி நிலுவை மீதியில் அங்கீகாரமின்றி ஏடுகளில் இருந்து அகற்றப்பட்டிருந்தது | நிலுவையை பதிவழிப்பதற்காக விடயப் பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். | இந்த பழைய நிலுவை மீதி தொடர்பாக கோவையொன்று திறக்கப்பட்டுள்துடன் அது தொடர்பாக கண்டறிந்து தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 276,774,291 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 173,281,595 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா’000 | ரூபா’000 | ரூபா’000 | ரூபா’000 | ரூபா’000 | ரூபா’000 | ரூபா’000 | ரூபா’000 |
| (i) | வீதவரியும் வரியும் | 147,458 | 169,807 | 169,484 | 109,892 | 149,069 | 163,911 | 151,189 | 106,455 |
| (ii) | வாடகை | 39,640 | 37,378 | 34,859 | 19,867 | 26,427 | 34,959 | 33,671 | 17,276 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 59,063 | 62,890 | 61,345 | 5,418 | 45,384 | 67,431 | 67,431 | 3,879 |
| (iv) | ஏனைய வருமானம் | 288,638 | 440,246 | 335,652 | 109,257 | 259,679 | 221 | 221,196 | 7,155 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முன்னைய ஆண்டின் இறுதியில் காணப்பட்ட நிலுவை ஆதனவரி, வாடகை மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணம் மீளாய்வாண்டின் போது முறையே ரூபா 3,437,000 தொகை, ரூபா 2,591,000 தொகை மற்றும் ரூபா 1,539,000 தொகையினால் அதிகரித்திருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்காக முறையான வழிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். | மதிப்பீடு செய்யப்படாத ஆதனங்களை கண்டறிந்து மதிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.2.3 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கொச்சிக்கடை உப அலுவலகத்திற்குரிய ஏற்றுக்கால பிரசேதத்தில் ஹொட்டலொன்று மற்றும் புடைவைக் கைத்தொழில் சாலைக்குரிய ரூபா 2,244,814 தொகையான நிலுவை ஆதனவரி சபை அங்கீகாரமின்றி பதிவழிக்கப்பட்டிருந்தது. | நிலுவை ஆதனவரியை பதிவழிப்பதற்காக விடயப்பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். | சகல ஆதனங்களுக்காகவும் வரிச் சலுகை வழங்கப்பட்டுள்ளது. |

## 2.2.4 வாடகை

| | | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | (i) | 2014 ஆம் ஆண்டு முதல் முத்திரை வைக்கப்பட்டு கொச்சிக்கடை மத்திய சந்தையில் உள்ள 02 கடைகளுக்காக 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 247,886 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வாடகை அறவிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதிலின் பின்னர் சமர்ப்பிக்கப்படும். |
| | (ii) | சபைக்குரிய 325 கடைகளின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 12,407,216 தொகையான நிலுவை மற்றும் 2012 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற நீர்கொழும்பு பிரசேத்தில் இறைச்சிக் கடைகளில் இருந்து ரூபா 105,758 நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிலுவை வாடகை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதிலின் பின்னர் சமர்ப்பிக்கப்படும். |
| (ஆ) | (i) | புதிய விருந்தினர் விடுதியை வாடகைக்கு வழங்குவதற்குரிய நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் நிபந்தனையின் பிரகாரம் 20 வருட காலஎல்லையில் சகல ஒவ்வொரு 05 வருடங்களுக்கு ஒரு தடவையும் மாதாந்த கட்டணம் 25 வீதத்தினால் அதிகரிப்பதற்கு இணங்கப்பட்டிருந்த போதிலும், 2003 ஆம் ஆண்டின் அறவிடப்பட்ட மாதாந்தக் கட்டணம் 15 வருடங்களில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | உடன்படிக்கையின் பிரகாரம் விருந்தினர் விடுதி வாடகை திருத்தப்படவேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |
| | (ii) | கடை வாடகைக்கு வழங்குவதற்குரிய முற்பணம் மற்றும் கேள்வி தொகைகளில் 2018 ஆம் ஆண்டின் ஆரம்ப நிலுவை ரூபா 18,748,049 ஆக இருந்ததுடன் அதில் ரூபா | நிலுவையை அறவிடுவதற்காக சட்டரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். | வாடகை செலுத்தாத கடைகளை முத்திரை வைத்து சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | 9,665,116 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. இந்த நிலுவைக்காக 2008 ஆம் ஆண்டு முதல் 10 வருடங்கள் கடந்திருந்த போதிலும், இதுவரையிலும் சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | | |
| (iii) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 1,982,546 தொகை அறவிட வேண்டிய வாராந்த சந்தைக் கட்டண வருமானத்தில் ரூபா 523,586 தொகை 2012 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட கால எல்லையிலிருந்து கொண்டுவரப்படும் மீதியாக இருந்ததுடன் 2019 யூன் 30 ஆந் திகதி வரையில் மொத்த நிலுவையில் ரூபா 736,322 தொகை அறவிடப்படவில்லை. | நிலுவையை அறவிடுவதற்காக முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவையில் குறிப்பிட்டதொரு தொகை இதுவரையில் அறவிடப்பட்டுள்ளது. |
| (iv) | வாடகைக்கு வழங்கப்பட்டுள்ள 03 மலசலகூட முறைமையிலிருந்தும் விஜயபால மென்டிஸ் விளையாட்டு அரங்கிற்கு அருகிலுள்ள பால் தொழிற்சாலையிலிருந்தும் கூட்டுமொத்தமாக ரூபா 81,642 தொகையான நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வாடகை சொத்துக்களுக்குரிய நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்கு முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும். | கேள்விதாரருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது. |

**2.2.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கொச்சிக்கடை உப அலுவலக பிரதேசத்தில் அமைந்துள்ள 46 ஹோட்டல்களிலிருந்தும் நீர்கொழும்பு அதிகாரப்பிரதேசத்தில் அமைந்துள்ள 25 ஹோட்டல்களிருந்தும் அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் நகர எல்லையில் நடாத்திச் | அனுமதிப்பத்திரம் இன்றி வியாபார நடவடிக்கைகளை செய்வதற்கு இடமளிக்க முடியாதிருந்ததுடன் அதற்காக | பதிலின் பின்னர் சமர்ப்பிக்கப்படும். |

| | | |
|---|---|---|
| செல்லப்படுகின்ற 02 மர ஆலைகளிலிருந்தும் மீளாய்வாண்டிற்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | |

**2.2.6 ஏனைய வருமானம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கோபுர வருமானம் | | |
| 45 தொலைத்தொடர்பு கோபுரங்களுக்காக ஆதனவரி அறவிடப்படவில்லை. | தொலைத்தொடர்பு கோபுரங்களுக்காக மதிப்பீடு செய்யப்பட்டு ஆதனவரி செய்யப்பட்டு ஆதனவரி வருமானம் சேகரித்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். | விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) முத்திரைக் கட்டணம் | | |
| கம்பஹா மற்றும் கொழும்பு காணி பதிவாளர் அலுவலகங்களிலிருந்து 2016 திசெம்பர் முதல் 2018 ஆம் ஆண்டு வரை அறவிட வேண்டிய முத்திரை வருமானக் கட்டணம் 2019 மே 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | முத்திரைக் கட்டணத்தை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. |
| (இ) சுற்றுலா படகு சேவையின் வருமானம் | | |
| ஹமில்ரன் எல இறங்குதுறையில் சுற்றுலா படகு சேவையொன்றை நடாத்திச் செல்வதற்கு தனியார் நிறுவனமொன்றுடன் தனியார் கேள்விகோரலின்றி 2017 - 2022 வரையான 05 வருட காலத்திற்காக மாதாந்தம் ரூபா 55,000 தொகையில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் சுற்றுலா கைத்தொழிலை அபிவிருத்தி செய்யும் அபிலாசைகளிலும் மற்றும் | ஆதனங்களை வாடகைக்கு வழங்கும் போதும் முறையான அங்கீகாரத்தின் கீழ் குறித்த பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். | வாடகை உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டு புதிய கேள்விதாரர் தெரிவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

சுற்றாடலுக்கு சாதகமாக நடாத்திச் செல்வதற்காக உள்ளடக்கப்பட்ட நிபந்தனை இலக்கம் 07 மற்றும் 08 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.2.7 மிகைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த தரப்பினர்களுக்கு எதிராக முன்னைய ஆண்டுகளில் விதிக்கப்பட்ட 04 மிகைக் கட்டணங்களுக்காக 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,407,613 தொகை அறவிடுவதற்கு காணப்பட்டது. | மிகைக் கட்டணத்தை அறவிடல் மற்றும் விடுவித்தல் மற்றும் தொடர்பான விடயங்கள் கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட வேண்டும். | ஒரு மிகைக்கட்டணத்திற்காக வழக்கு ஒன்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணையில் காணப்படுவதுடன் இன்னுமொரு மிகைக்கட்டணத்திற்காக ஒரு பகுதி பணமாக செலுத்தப்பட்டுள்ளது. மாகாண விடயப்பொறுப்பு அமைச்சரினால் இன்னும் 02 மிகைக்கட்டணங்கள் விடுவிக்கப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் செயலாற்றல் அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | ஆண்டிற்குரிய இலக்கிடப்பட்ட பணிகள் தொடர்பான செயலாற்றல் அறிக்கையொன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | பதில் சமர்ப்பிக்கப்படவில்லை. |

## (ஆ) இலக்குகளை நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபை நிதியத்தின் மூலம் ரூபா 16,142,173 பெறுமதியான 20 வேலைகளை பூர்த்தி செய்வதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த போதிலும், 2019 யூன் 15 ஆந் திகதி வரையிலும் அந்த வேலைகள் பூர்த்தி செய்யப்படவில்லை. | உடன்படிக்கை செய்யப்பட்ட செயற்திட்டங்களை விரைவாகப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பிரதேசவாசிகளின் பிரச்சினைகளின் அடிப்படையில் சில செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்படவில்லை. முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய செயற்திட்டங்கள் மாத்திரம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. கடன்கொடுத்தோர் பதிவேட்டில் உள்ளடக்கப்படாத செயல்திட்டங்களை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ii) | தக்கியா வீதியில் போரத்தோட்ட முதல் வருகின்ற இடதுப்பக்க வடிகாண் மற்றும் வீதியின் இருபக்கத்தையும் மீளமைப்பு செய்யும் வேலைக்காக ரூபா 1,292,605 தொகையில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும், உடன்படிக்கையின் பிரகாரம் உரிய செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் ரூபா 317,563 தொகை செலுத்தி வடிகாண் மீளமைப்புச் செய்யும் பணிகள் கைவிடப்பட்டிருந்தது. | உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |

## (இ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாநகர சபையின் பசார் II பகுதி மற்றும் தலாகேன பிரசேதத்தில் கழிவுப் பொருட்களை கொண்டு போடுவதற்காக | | |

2015 யூலை 01 ஆந் திகதி முதல் 2018 யூன் 30 வரையான மூன்று வருட காலப்பகுதிக்காக மாதமொன்றிற்கு ரூபா 2,196,000 தொகை செலுத்தும் அடிப்படையில் தனியார் கம்பனியொன்றுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| (i) | கம்பனியினால் சேகரிக்கப்படுகின்ற கழிவுப்பொருட்கள் நகர எல்லைக்கு வெளியே தனியார் காணியொன்றில் கொண்டுபோடும் உடன்படிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் கிராமவாசிகளின் எதிர்ப்பின் அடிப்படையில் 2018 ஏப்ரல் முதல் மாநகர சபை எல்லையில் கொச்சிக்கடை பிரதேசத்தில் கழிவுத்தளத்தில் கொண்டுபோடப்பட்டிருந்தது. | உடன்படிக்கையை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சில சந்தர்ப்பங்களில் கொச்சிக்கடையின் ஓவிட்டியாவத்த கழிவுப்பொருள் தளத்தில் கழிவுப்பொருட்கள் கொண்டுபோடப்பட்டிருந்தது. |
| (ii) | மாநகர சபையின் இடமொன்றில் கழிவுப்பொருட்கள் அகற்றப்பட்டமையினால் உடன்படிக்கையின் பிரகாரம் பணம் செலுத்தப்பட வேண்டியில்லாமையால் அதற்காக மாதமொன்றிற்கு ரூபா 130,000 - ரூபா 155,000 அறவிடுவதற்கு பிரதான பொதுச் சுகாதார பரிசோதகர் நிதி செயற்குழு கூட்டத்தில் பரிந்துரை செய்திருந்த போதிலும் மாதத்திற்கு ரூபா 50,000 வீதம் குறைக்கப்பட்டிருந்தது. | பிரதான பொது சுகாதார பரீட்சகரால் நிதி செயற்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட சிபார்சு தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும். | எதிர்ப்பின் மத்தியிலும் வெளி மாகாணத்திற்கு கழிவுப்பொருட்களை அகற்ற முடியாதிருந்தமையினால் சபையின் பிரதேசத்தில் கழிவுப்பொருட்களை கொண்டு போடுவதற்கு சாதாரணமாக கட்டணமொன்று அறவிடப்பட்டுள்ளது. |
| (iii) | இதன் காரணமாக ஒப்பந்தக்காரர்க்கு சேமிக்கப்படுகின்ற எரிபொருள், காலம் தொடர்பாக கவனத்தில் கொள்ளப்படாதிருந்ததுடன் கழிவுப்பொருட்களை மண்இட்டு மூமுதல் சபையினால் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக மேலதிக | சபையின் கழிவுப்பொருட்களை அகற்றுவதற்கு அனுமதி வழங்குவதற்கு முன் அதற்காக ஏற்படுகின்ற கிரயங்களை கவனத்தில் கொண்டு போதியளவான கட்டணங்களை | சேவை உடன்படிக்கையின் பிரகாரம் உரிய நிறுவனம் கழிவுப்பொருள் சுத்தகரிப்பு தளத்தை நடாத்திச் செல்வதனால் சபையினால் மேலதிக கட்டணமொன்று அறவிடப்படுவதில்லை. |

| | | |
|---|---|---|
| செலவினத்தை செய்வதற்கு ஏற்பட்டிருந்தது. | அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுக்க வேண்டும். | |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் நிலைபேறான நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் 2015 - 2030 காலத்தில் அடையப்பட வேண்டிய நிறைவேறான அபிவிருத்தி மற்றும் இலக்குகளை இனங்கண்டு அவற்றை அமுல்படுத்தல் அந்த நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடல் மற்றும் ஒழுங்கமைப்பதற்கான குறிகாட்டிகளை இனங்காணல், அடிப்படைத் தரவுகளை இனங்காணல் என்பவற்றுக்காக அந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஐக்கிய நாடுகளின் அமைப்பின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் அபிவருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலைபேறான இலக்கை அடிப்படையாகக் கொண்டு நான்கு வருட திட்டம் வருடாந்த திட்டம் திருத்தப்படுவதுடன் எதிர்காலத்தில் கணக்காய்விற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டிற்காக நீர்கொழும்பு அதிகாரப்பிரசேத்தில் 42 பூரணமாக பராமரிப்பு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்ததுடன் உள்ளடக்கப்பட்ட பொருட்களின் கிரயம் ரூபா 5,937,855 ஆகும். எனினும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக ரூபா 38,074,599 தொகையான பொருட்கள் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் மதிப்பீட்டிற்குப் புறம்பாக ரூபா 32,136,744 தொகையான பொருட்கள் விநியோகிக்கப்பட்டிருந்தது. | மதிப்பீடு இன்றி பொருட்கள் விநியோகிக்கப்பட முடியாது. | பொருட்களை விநியோகிப்பதற்காக மதிப்பீடு தயாரித்து தனியான கோவையிடுமாறு தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2015 ஆம் ஆண்டில் பாதீட்டு நிதிஏற்பாட்டின் கீழ் பிரதேசத்தில் பாடசாலை மாணர்களுக்கு | முறையான விசாரணை மேற்கொண்டு | தற்போது விசாரணையொன்று நடாத்துவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | பகிர்ந்தளிப்பதற்காக ரூபா 197,036 பெறுமதியுடைய 05 வகையான 4847 பாடசாலைப் புத்தகங்கள் 2015 நவம்பர் 24 ஆந் திகதி நகர சபை உறுப்பினர்களுக்கு விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும், 2019 மார்ச் 07 ஆந் திகதி சபைக்கு இடப்பட்ட கடிதத்தின் பிரகாரம் அவரின் கையொப்பம் போலியாக இடப்பட்டு அவை அது பெறப்பட்டிருந்தமை குறிப்பிடப்பட்டிருந்தது. 2019 மே 31 ஆந் திகதி வரையிலும் அது தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்படவில்லை. | பொறுப்புவாய்ந்தவரை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |
| (இ) | நீர்கொழும்பு பஸ் நிலையத்திற்கு முன்னாலுள்ள வீதி ஒதுக்கப்பகுதியில் தற்காலிக அடிப்படையில் சபை குறித்திட்ட ஆதனமொன்றில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தை ஏனைய தரப்பினருக்கு வாடகைக்கு வழங்குவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | உரித்தை உறுதிப்படுத்த முடியாமல் ஆதனங்களை சபைக்கு வழங்க முடியாது | பதிலளிக்கப்படவில்லை. |
| (ஈ) | நீர்கொழும்பு நகர மத்தியில் மக்கள் வங்கிக்கு முன்னாலுள்ள வெற்று நிலத்தின் ஒரு பகுதியில் நடாத்திச் செல்லப்படுகின்ற அனுமதியற்ற 06 கடைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |

## 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 55 ஊழியர்களிடமிருந்து 1986 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரை அறவிட வேண்டிய இடர்கடன் மற்றும் ஆதன மீதி ரூபா 487,226 தொகையும், விழா மற்றும் விசேட முற்பண கடன் மீதி ரூபா 76,692 தொகையும் உரிய | உரிய நபர்களிடம் இருந்தோ பிணையாளரிடமிருந்தோ நடவடிக்கை எடுக்கப்பட | செயலிழந்துள்ள கடன் மீதியை பதிவழிப்பதற்கு உள்ளூராட்சி ஆணையாளரின் ஆலோசனையின் படி சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்ததுடன் அதன் |

| | | |
|---|---|---|
| உத்தியோகத்தர்களிடமிருந்தும், ஓய்வூதியத்திலிருந்தோ அல்லது பிணையாளரிடமிருந்தோ அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் செயற்பாடற்ற கடன் மீதியாக தொடர்சியாக கணக்குகளில் பேணிச் செல்லப்பட்டிருந்தது. | வேண்டும். | பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு கணக்காய்விற்கு அறிக்கையிடப்படும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 வாகனப் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வாகன மெய்மையாய்வு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | மெய்மையாய்வு செய்யப்பட்ட அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |

#### 3.4.2 சொத்துக்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நீர்கொழும்பு புதிய பஸ் நிலையத்தில் ரூபா 5,122,994 தொகை செலவில் பொருத்தப்பட்ட இலத்திரனியல் படிக்கட்டுக்களை பராமரிக்கும் நடவடிக்கைகளுக்காக 2012 திசெம்பர் முதல் 2017 ஆம் ஆண்டு வரை ரூபா 605,408 தொகை செலுத்தப்பட்டிருந்தது. பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமையினால் மின்சார படிக்கட்டுக்களில் Step rollers 2017 மே 31 ஆந் திகதி முதல் செயலிழந்து காணப்பட்டதுடன் அதற்காக ரூபா 76,245 மதிப்பீடொன்று அங்கீகரிக்கப்பட்டது மாத்திரம் இடம்பெற்றதுடன் அதனை செயற்படு நிலைக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களை பயன்பாட்டிற்கு எடுக்க வேண்டியிருந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் பராமரிப்பு நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும். | எதிர்காலம் தொடர்பாக கவனத்தில் கொண்டு மின்சார படிக்கட்டுக்கள் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் செயற்படு நிலையில் காணப்படாத போதிலும் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |

**3.5 பெறுகை**

**ஒப்பந்த நிர்வாகம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நீர்கொழும்பு மாநகர சபை பிரதேசத்தில் வணிக வசதிகளுடகன் கூடிய இரண்டு மாடி நூலகக் கட்டிடமொன்று ரூபா 157,101,803 தொகையான மதிப்பீட்டின் கீழ் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும், மேலதிக வேலைகளின் பெறுமதி ரூபா 5,619,335 ஆக இருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. | | |
| (i) | கட்டிடத்தின் கூரையை நிர்மாணிக்கும் போது அதற்கு ஆதாரமாக அதற்காக பயன்படுத்தப்பட்ட அலுமினியத்திற்காக ஏற்றக் கொள்ளப்பட்ட பரிந்துரையொன்று சமர்ப்பிக்கப்படாதிந்ததுடன் நூலகத்தை நிர்மாணிக்கும் போது பயன்படுத்தப்பட்ட இரும்புக் கம்பிகளின் வலுத்தன்மை அதற்குரிய தரம் தொடர்பாக கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் குறித்த பரிசோதனையொன்று மேற்கொள்ளப்படவில்லை. வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் சில பிரிவுகளின் தடிப்பு தொடர்பான பரிசோதனைக்கான ஒப்பந்தக்காரரினால் உரிய இடங்கள் தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் நிர்மாணத்திற்காக பயன்படுத்தப்பட் சில கொங்கிறீட் கலவைகளின் கொள்ளளவு சக்தி குறித்த சக்தி மட்டத்தில் காணப்படவில்லை. | நிர்மாணங்கள் நிர்மாணப் பொருட்களின் தரம் தொடர்பாக உபபரிசோதனைகள் மூலம் உறுதிப்படுத்தி சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஆலோசனை நிறுவனத்தின் பரிந்துரையுடன் ஒப்பந்த நிறுவனம் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட பரிசோதனை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| (ii) | வேலை ஆரம்பித்தல் முற்பணத் தொகைக்கு மேலதிகமாக | பெறுகை ஆவணங்களில் | கொடுப்பனவுகள் ஒப்பந்தக்காரர் சமர்ப்பித்த |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்துவதற்காக பட்டியல் சமர்ப்பிக்கப்படாதிருக்கும் போது ஒப்பந்தக்காரரின் கோரிக்கையின் அடிப்படையில் டைல், கண்ணாடி மற்றும் அலுமினியம் கொள்வனவு செய்வதற்கு 03 உறுதிச்சீட்டுக்கள் மூலம் ரூபா 9,723,914 தொகை 2018 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்ததுடன் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி (CIDA) பெறுகை ஆவணங்கள் பிரகாரம் வேலைத்தளத்தில் உள்ள பொருட்களின் பெறுமதியில் ஆகக்கூடியதாக செலுத்த முடியுமான தொகை 80 சதவீதம் வரையாக இருந்த போதிலும், 100 சதவீதமும் செலுத்தப்பட்டிருந்தது. | உள்ள நிபந்தனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பட்டியல்களில் குறைக்கப்பட்டுள்ளது. |
| (iii) | 2016 மார்ச் 16 ஆந் திகதி முதல் ஒரு வருடத்தில் இந்தக் கட்டிடம் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2018 மே 31 ஆந் திகதி வரையிலும் கொங்கிறீட் இடல், கூரை அமைத்தல், டைல் பதித்தல் மற்றும் மின் உபகரணங்களை பொருத்துதல் போன்ற செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் அதன் பிரகாரம் மொத்த மதிப்பீட்டு தொகையான ரூபா 157,101,803 இல் 2019 மே 30 ஆந் திகதி வரையில் ரூபா 53,576,550 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் செலுத்தி இடைநடுவில் இடைநிறுத்தப்பட்டிருந்தது. | உடன்படிக்கை செய்யப்பட்ட காலத்தில் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்ததுடன் தாமதத்திற்கான கட்டணம் அறவிடப்பட வேண்டும். | குறித்துரைத்த காலத்தில் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படாமையினால் CIDA நிறுவனத்தின் ஆலோசனையின் பிரகாரம் உடன்படிக்கையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | தளுவகொட்டுவ ஜனபத மாவத்தையில் II ஆவது ஒழுங்கையை காபட் இடும் செயற்திட்டத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட பணிகள் பூர்த்தி செய்யப்படும் போது 04 விடயங்களில் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியை விட குறைவாக பூர்த்தி செய்யப்பட்டமையினால் ரூபா 1,264,261 தொகையான முரண்பாடொன்று காணப்பட்டதுடன் முரண்பாடு 41 - | மதிப்பீட்டை மிகவும் சாத்தியமான முறையில் தயாரித்தல் வேண்டும் | நிதியேற்பாடு செய்யப்பட்ட தொகையில் மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், உள்ளபடியாக நிறைவேற்றப்பட்ட அளவின் அடிப்படையில் செலுத்தப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| 55 சதவீதத்திற்கு இடையில் காணப்பட்டது. | | |
| (இ) கிராமிய வசதிகள் அபிவிருத்தி செய்யும் 2017 இன் நிகழச்சித்திட்டத்தின் கீழ் சேரம் கட்டிடத்தில் உள்ள வீதியை காபட் இடுவதற்காக 1,813,933 (வற் இன்றி) தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 1,365,156 தொகை செலுத்தப்பட்டிருந்தது. விடய இலக்கம் 07 இன் கீழ் 138.68m3 அளவில் ABC வழங்கப்பட்டு செப்பனிடுவதற்காக ரூபா 352,629 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த பணிகள் ஒப்பந்தக்காரரினால் மேற்கொள்ளப்படவில்லை. | மதிப்பீட்டைத் தயாரிக்கும் போது ஏற்படுகின்ற சிக்கல்கள் தொடர்பாக தொழில்நுட்ப உத்தியோகத்தரின் அனுபவத்துடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். | அந்த வேலை விடயங்கள் மூலம் வீதியை தொடர்ந்தும் பயன்படுத்தும் வீடுகள் வெள்ளத்தினால் தாழும் நிலைமையொன்று காணப்படுகின்றமையால் நிறைவேற்ற முடியாதிருந்தது. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யும் விசேட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 53,751,201 தொகையான 44 செயற்திட்டங்களில் 08 செயற்திட்டங்கள் நிதிஏற்பாடு செய்யப்பட்ட தொகைக்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே இடைவெளி 52 சதவீதம் முதல் 70 சதவீதம் வரையாக இருந்தமையால் சரியாக மதிப்பீடு இன்றி நிதியேற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | மதிப்பீட்டுத் தொகையை விட குறைவான பெறுமதியில் உடன்படிக்கை செய்யப்பட்டமையால் முரண்பாடுகள் காணப்பட்டன. |